**O.S.No.9/2024**

**வா.சா.1 திருமதி.புஷ்பவள்ளி**

நாள் : 26.06.2025  நேரம் : 11.00 AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

நான் இந்த வழக்கை இராஜேந்திரன் மற்றும் சுந்தர்ராசுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கை இட பிரச்சினைக்காக தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கை எத்தனை சொத்துக்களை பொறுத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 சொத்துக்களை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் முதலாவது சொத்து விஸ்தீரணம் என்னவென்றால் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் முதல் இலக்கச் சொத்து நத்தம் மனையிடம் என்று சொன்னால் சரிதான். இரண்டாவது இலக்கச் சொத்து புஞ்சை நிலம் என்று சொன்னால் சரிதான். தாவாச் சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள். எனது மாமனார் கார்மேகம் இறந்து சுமார் 30 வருடங்கள் இருக்கும். தாவா சொத்தில் முதல் இலக்கச் சொத்துக்கு எனது மாமனாரின் பெயரில்தான் பட்டா உள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா முதல் இலக்கச் சொத்து எனது மாமனாருக்கு அவரது அனுபவத்தின் பேரில் பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான். மற்ற இரண்டு இலக்கச் சொத்துக்களும் எனது மாமனாரின் தகப்பனாரது பூர்வீகச் சொத்து என்று சொன்னால் சரிதான். எனது மாமனார் உயிருடன் இருந்த காலத்தில் தாவாச் சொத்துக்களை அவரது வாரிசுகளுக்கு பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. தாவாச் சொத்துக்களை தற்போது யார் குடியிருக்கிறார்கள் என்றால் இராஜேந்திரன் மற்றும் சுந்தர்ராஜ் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். மேலும் மலைராஜ்க்கு பணம் கொடுத்துவிட்டார்கள். எனக்கு ஏதும் கொடுக்கவில்லை. எனது கணவர் இறந்து 20 வருடங்கள்

ஆகிவிட்டன. எனது கணவர் இறந்து 20 வருடங்களுக்கு பிறகு இந்த வழக்கை பொய்யான காரணங்களை கூறி தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேலும் எனது கணவர் இறந்து 20 வருடங்களுக்கு பிறகு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு விசாரிக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவாச் சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஏற்பட்டிருப்பது பற்றி தெரியாமல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எந்த பங்கும் கொடுக்கவில்லை. தாவாச் சொத்துக்களில் நான் அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது இரு மகன்களும் வெளிநாட்டில் உள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். எனது மகன்களும் தாவாச் சொத்துக்களில் எந்த அனுபவமும் செய்யவில்லை. எனது கணவருடன் பிறந்த இரு சகோதரிகளான 2ம் பிரதிவாதி நாகலட்சுமி மற்றும் புஷ்பம் (இறந்துவிட்டார்) அவரது மக்களான 5, 6, 7, 8 பிரதிவாதிகள் ஆகியோர்கள் தற்போது வெளியூர்களில் வசித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி 2, 5, 6, 7, 8 பிரதிவாதிகளும் தாவாச் சொத்துக்களில் எவ்வித அனுபவமும் செய்யவில்லை. எனது பிராதில் நானும், பிரதிவாதிகளும் தாவாச் சொத்துக்களில் கூட்டாக அனுபவம் செய்துவருவதாக சொல்லியுள்ளதற்கு ஏதேனும் ஆதாரங்கள் உள்ளதா என்று சொன்னால் இல்லை.

எதிர்தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

விசாரணை முடிவுற்ற நேரம்:11.20 AM

சாட்சியின் கையொப்பம்.